பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை – 4

21 06 2024 **FRIDAY** 12 40 **PM**

வணக்கம். ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சர்வதேச யோகா தினத்தையொட்டி, இன்று நாடுமுழுவதும் யோகா நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

   பிரதமர், மத்திய அமைச்சர்கள், அரசியல் கட்சித்தலைவர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளனர்.

2. கள்ளக்குறிச்சி விஷச்சாராய சம்பவம் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட மாநில அரசின் ஒருநபர் ஆணையம் இன்று விசாரணையை தொடங்கியது.

3. கள்ளக்குறிச்சி சம்பவத்தில் பெற்றோரை இழந்த குழந்தைகளின் கல்விக்கு அரசே பொறுப்பேற்கும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் பேரவையில் தெரிவித்துள்ளார்.

4. தமிழக சட்டப்பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட அஇஅமுகவினர் பேரவை நிகழ்ச்சிகளை புறக்கணிப்பதாக கூறியுள்ளனர்.

5. ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே – சீனாவின் Fangran Tian இணை இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

சர்வதேச யோகா தினம் இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் நடைபெற்று வரும் யோகா தின கொண்டாட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு யோகா பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், யோகா என்பது மனிதகுலத்திற்கு இந்தியா தந்துள்ள கொடை என்று குறிப்பிட்டுள்ளார்.

பரபரப்பான வாழ்க்கை முறையால் ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து மக்களை விடுவிப்பதில், யோகா முக்கியப் பங்காற்றுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அன்றாட வாழ்க்கையில் அனைவரும் யோகாவை பின்பற்ற வேண்டும் என்று திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

நகரில் உள்ள **Sher-i-Kashmir** சர்வதேச மாநாட்டு மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி யோகா பயிற்சிகளை மேற்கொண்டார்.

பின்னர் இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், மனம் மற்றும் உடலை புத்துணர்வாக வைத்துக் கொள்வதில் யோகா முக்கியப் பங்காற்றுவதாக தெரிவித்தார்.

உலகம் முழுவதும் யோகாவை மேற்கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

2015ஆம் ஆண்டு துர்க்மெனிஸ்தான் நாட்டிற்கு தாம் சென்ற போது, அங்கு ஒரு யோகா மையத்தை திறந்து வைத்ததாகவும், தற்போது அங்குள்ள மருத்துவ பல்கலைக் கழகங்களில் யோகா ஒரு பாடமாக பயிற்றுவிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

சவுதி அரேபியா, ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் யோகா பலரால் பின்பற்றப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலமாக இளையோருக்கு யோகக் கலையில் வேலைவாய்ப்புகள் ஏற்பட்டிருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, மத்திய அமைச்சர் திரு. பிரதாப்ராவ் கண்பத்ராவ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தில்லி லோதி கார்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முயற்சிகளால் யோகா உலகம் முழுவதும் அங்கீகாரத்தை பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன், தமிழகத்தில் கோயம்புத்தூரில் கல்வி நிறுவனம் ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசினார்.

யோகா மனஉறுதியையும், உடல் ஆரோக்கியத்தையும் வழங்குகிறது என்றும், மாணவர்கள் தினமும் யோகாவை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. எல். முருகன் கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 39 செகண்ட்ஸ்)

ராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடி அரிச்சல்முனையில் நடைபெற்ற யோகா நிகழ்வில் பாதுகாப்பு இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் கலந்துகொண்டார்.

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற யோகா நிகழ்வில் மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, மாணவர்களுடன் இணைந்து யோகாசன பயிற்சிகளை மேற்கொண்டார்.

சென்னை மெரினா கடற்கரையில் ராணுவ தென் மண்டல தலைமையகம் சார்பாக நடைபெற்ற யோகா பயிற்சியில் லெப்டினென்ட் ஜெனரல் **K.S. Brar** கலந்து கொண்டார்.

உத்தரப்பிதேசம், சிக்கிம், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், நாகலாந்து, மணிப்பூர் உட்பட நாடுமுழுவதும் பல்வேறு இடங்களில் யோகா தினத்தை ஒட்டி, இன்று நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

'நமக்கும், சமுதாயத்திற்கும் யோகா' என்பது இந்த ஆண்டிற்கான யோகா தின கருப்பொருளாகும்.

**>>>><<<<**

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், நடப்பு நிதியாண்டுக்கான பட்ஜெட் தொடர்பாக, வேளாண் அமைப்புகள் மற்றும் விவசாய பொருளாதார வல்லுநர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இந்த ஆலோசனையில் தெரிவிக்கப்படும் பரிந்துரைகள் பட்ஜெட்டில் இடம்பெறும் என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

**>>>><<<<**

தில்லி மதுபானக் கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்ட தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் ஜாமினை எதிர்த்து அமலாக்கத்துறை தில்லி உயர்நீதிமன்றத்தில் இன்று மேல்முறையீடு செய்துள்ளது.

இதனை அவசர வழக்காக கருதி, விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட தில்லி உயர்நீதிமன்றம், திரு. கெஜ்ரிவாலின் ஜாமின் உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற அமலாக்கத்துறையின் கோரிக்கையை நிராகரித்தது.

>>>><<<<

ஹஜ் யாத்திரையின்போது யாத்ரிகர்களின் உடல்நிலையை பரிசோதித்து, அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை செயலர் திரு. அபூர்வா சந்திரா கூறியுள்ளார்.

புதுதில்லியில் யாத்திரிகர்களுக்கான மருத்துவ கையேட்டை வெளியிட்டுப் பேசிய அவர், இந்தியாவைச் சேர்ந்த குடிமக்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும், உடனடி உதவி வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

>>>><<<<

தமிழக சட்டப்பேரவை இன்று காலை கூடியதும், கள்ளக்குறிச்சி விஷச்சாராய சம்பவம் தொடர்பாக விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று கோரி அஇஅதிமுக உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு பதிலளித்த சட்டப்பேரவை தலைவர் திரு. அப்பாவு, அதற்கான நேரம் பின்னர் ஒதுக்கப்படும் என்று தெரிவித்தார்.

கருப்புச்சட்டை அணிந்து வந்த அஇஅதிமுக உறுப்பினர்கள் தங்களது எதிர்ப்பை தொடர்ந்து வலியுறுத்தியதால், அவர்களை அவையிலிருந்து வெளியேற்றுமாறு பேரவைத் தலைவர் அவைக் காவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர் நாள் முழுமைக்கும் அவர்கள் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ள அனுமதி இல்லை என்றும் அவைத் தலைவர் தெரிவித்தார்.

அவையின் மாண்பை குலைக்கும் வகையிலும், அவை விதிகளுக்கு புறம்பாக செயல்பட்டதாகவும் இந்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக திரு. அப்பாவு கூறினார்.

கேள்வி நேரம் முடிந்த பின்னர் பேசிய முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், அஇஅதிமுவினர் எதிர்க்கட்சியாக இருப்பதால், அவர்களை மீண்டும் அவைக்குள் அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

மானிய கோரிக்கையில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

இதையடுத்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அவை தலைவர் அனுமதி அளித்தார்.

முன்னதாக, அவையிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி, பேரவையில் மக்கள் பிரச்சினையை பேசுவதற்கு அரசு அனுமதிக்கவில்லை என்றும், இத்தகைய போக்கு ஏமாற்றமளிப்பதாகவும், எனவே அவை நடவடிக்கைகளை அஇஅதிமுக புறக்கணிப்பதாகவும் தெரிவித்தார்.

தமிழக பிஜேபி உறுப்பினர்களும் கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

>>>><<<<

கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 200 லிட்டர் விஷச்சாராயம் பிடிபட்டதாகவும், இதற்கு பயன்படுத்தப்பட்ட மெத்தனால், புதுச்சேரியிலிருந்து கொண்டு வரப்பட்ட கண்டறியப்பட்டதாகவும் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் பேரவையில் தெரிவித்தார்.

இதுதொடர்பான அறிக்கையை சமர்ப்பித்த அவர், கள்ளக்குறிச்சியில் ஏற்பட்ட பாதிப்புகளை உடனடியாக கண்டறிவதற்கும், மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த மருத்துவ உதவிகளை மேற்கொள்ளவும், அமைச்சர்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அரசின் சார்பில் கூடுதலாக 57 மருத்துவர்கள் அனுப்பி வைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் பெற்றோரை இழந்த குழந்தைகளின் கல்விக்கு அரசே பொறுப்பேற்கும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

>>>><<<<

கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு நபர் ஆணையம் இன்று விசாரணையை தொடங்கியது.

ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. கோகுல்தாஸ் தலைமையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

கள்ளக்குறிச்சி ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் இந்த விசாரணையில் மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர்.

முன்னதாக, கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய ஆட்சியர் திரு. பிரசாந்த், பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட – பிரசாந்த் 38 செகண்ட்ஸ்)

>>>><<<<

ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே – சீனாவின் Fangran Tian இணை இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது

இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 7-5 என்ற செட்கணக்கில் பிரேசிலின் Rebeca Pereira - நெதர்லாந்தின் Eva Vedder இணையை வென்றது.

>>>><<<<

உலக கோப்பை ட்வென்ட்டி ட்வென்ட்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி St. Lucia-வில் இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக நடைபெற்ற சூப்பர்-8 சுற்றுப்போட்டியில் ஆஸ்திரேலியா டக்வொர்த் லுயிஸ் முறையில் 28 ரன் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

>>>>END<<<<